# இரண்டாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு - 2021

## "பன்முக நோக்கில் சங்க இலக்கியம்"

## ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு

பதிப்பாசிரியர்கள்:
**பேராசிரியர். ம.இரகுநாதன்**
**திரு. ஈ.குமரன்**

**2021**
**தமிழ்த்துறை,**
**கலைப்பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,**
**இலங்கை.**

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | **தமிழியல் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு** |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பாசிரியர்கள் | : | **பேராசிரியர். ம. இரகுநாதன்** |
| | | **திரு. ஈ. குமரன்** |
| முதற்பதிப்பு | : | 2021 |
| வெளியிடுவோர் | : | தமிழ்த்துறை, |
| | | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| பக்க அளவு | : | B5 |
| பக்கங்கள் | : | |
| அச்சிட்டோர் | : | நியூ எவகிறீன் அச்சகம் (பிறைவேற்) லிமிடெட், |
| | | யாழ்ப்பாணம். |
| ISBN | : | 978-624-97806-3-7 |

# வீடுபேறு: திருமுருகாற்றுப்படையை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

**திரவியநாதன் திலீபன்,**
விரிவுரையாளர்,
மெய்யியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
thileepan1983@yahoo.com

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க கால இலக்கியங்கள் அக்கால மக்களின் நாகரிகத்தையும் வாழ்வியல் அம்சங்களையும் பறைசாற்றி நிற்பதோடு குறித்த சமூகத்தின் பதிவுகளாகவும் வரலாற்று ஆவணங்களாகவும் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இதற்கு சங்க காலத்தில் தோற்றம்பெற்ற ஆற்றுப்படை இலக்கியங்களும் தக்கசான்றுகளாக விளங்குகின்றன. இவ்விலக்கியங்கள் தனித்துவமான இலக்கிய மரபினைக் கொண்டவையாகும். குறிப்பாக மக்களின் வாழ்வியல் முறைகள், பண்பாட்டம்சங்கள், விருந்தோம்பல் பண்புகள் மற்றும் அறம், பொருள், இன்பம், வீடுபேறு பற்றிய செய்திகளைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. ஆற்றுப்படை நூல்களில் திருமுருகாற்றுப்படை ஏனைய ஆற்றுப்படை நூல்களுடன் ஒப்பிடுகையில் தனித்துவம் பெற்றது. "யான் பெற்ற இன்பம் பெறுக வையகமே" என்ற அருளியல் நோக்கத்துடன் முருகனின் அருளால் வீடுபேறு அடைந்த ஒருவன் அத்தெய்வத்திடம் பிறரையும் வழிப்படுத்துவதாக இந்நூல் விளங்குகின்றது. சங்க நூல்களுக்கெல்லாம் கடவுள் வாழ்த்துப்போல அமைந்திருக்கக்கூடிய சிறப்பும் இந்நூலுக்குண்டு. எனவே, இவ்வாய்வானது திருமுருகாற்றுப்படையின் சிறப்பம்சங்களையும் அதனூடாக வீடுபேறடைதல் பற்றிய செய்திகளையும் ஆராய்வதாகவுள்ளது. இவ்வாய்விற்கு மூல நூலான திருமுருகாற்றுப்படையினையும் அந்நூல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நூல்களையும் கட்டுரைகளையும் இணையத் தளப் பதிவுகளையும் அடிப்படையாகக்கொண்டு ஆராயப்படவுள்ளது.

**திறவுச் சொற்கள்:** சங்க காலம், ஆற்றுப்படை, திருமுருகாற்றுப்படை, முருகன், வீடுபேறு

அறிமுகம்

சங்க இலக்கியங்கள் தமிழ் இலக்கியத்திற்கு அடிப்படையாகவும் மக்களின்

வாழ்வியல் அம்சங்களைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றதொன்றாகவும் விளங்குகின் றன. இவ்விலக்கியங்கள் மனித நாகரிகத்தையும் பண்பாட்டமிசங்களையும் எடுத்துக்காட்டு வதோடு அக்கால சமூகத்தின் பதிவுகளாகவும் வரலாற்று ஆவணங்களாகவும் விளங்குகின்றமை அவற்றின் தனித்துவமாகும்.

சங்க கால இலக்கியங்கள் அகம், புறம் என இருவகையாகப் பாகுபடுத்தப்பட்டு அவற்றின் சிறப்பம்சங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன. இதன்படி காதல், இன்பம், பொழுதுபோக்கு போன்றன அகம் சார்ந்தனவாகவும் போர், வீரம், வெற்றி, கொடைச் சிறப்புக்கள் புறம் சார்ந்தன வாகவும் விளங்குகின்றன. செய்யுள் வழக்கில் மட்டுமன்றி உலக வழக்கிலும் சங்க கால மக்கள் தூய காதலொழுக்கத்தையும் அறத்தினின்றும் வழுவாத வீர வாழ்க்கையையும் சிறப்பாகப் போற்றி வந்தனர் என்பது அக்கால நூல்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றது (செல்வநாயகம், 2013:8).

இச்சங்க இலக்கியங்கள் ஒழுங்குமுறையாக எட்டுத்தொகை, பத்துப்பாட்டாக வகுக்கப்பட் டுள்ளன. இவை "மூத்தோர்கள் பாடியருள் பத்துப்பாட்டு எட்டுத்தொகையுங் கேடில் பதினெட்டுக் கீழ்க்கணக் கணக்கும்" எனப் போற்றப்படுகின்றன (அருளம்பலம், 1937:07). இவற்றுள் பத்துப் பாட்டு இலக்கியங்கள் நெடும்பாட்டுக்களாகவும் சொற்செறிவும் பொருட்செறிவும் கொண்டன வாகவும் விளங்குகின்றன. "சான்றோர் உரைத்த தண்தமிழ் தெரியல் ஒருபது பாட்டும்" என நச்சினார்க்கினியர் சிறப்பித் துப் பாராட்டுகின்றார். இப்பத்துப்பாட்டு இலக்கியங்களை முறையே,

"முருகு பொருநாறு பாண் இரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய
கோல நெடுநல்வாடை கோல் குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து" என்ற வெண்பாவால் அறியமுடிகின்றது.

பத்துப்பாட்டில் ஐந்து இலக்கியங்கள் ஆற்றுப்படை இலக்கியங்களாகும். பண்டைத் தமிழில் ஆற்றுப்படை என்பது தனியொரு இலக்கிய மரபாகப் பேணி வளர்க்கப்பட்டமை தனிச் சிறப்பிற் குரியதாக விளங்குவதோடு தமிழர்களின் பண்பாடாகவும் இருந்து வந்திருக்கிறது. இவ்வாற்றுப் படையானது, பொருளை வேண்டி ஆற்றுப்படுத்துவதாகவும் அருளை வேண்டி ஆற்றுப்படுத்து வதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இதன்படி அருளைவேண்டி ஆற்றுப்படுத்துவதில் திருமுருகாற் றுப்படை முதன்மைபெற்று விளங்குகிறது. இது பரம்பொருளான முருகப்பெருமானிடம் வீடுபேறு பெறும் பொருட்டு ஆற்றுப்படுத்து வதாக அமைந்து காணப்படுகிறது.

சங்க இலக்கியங்களுக்கெல்லாம் கடவுள் வாழ்த்துப்போல அமைந்திருக்கக்கூடிய சிறப்பும் திரு முறைகளில் பதினோராம் திருமுறையின் பகுதியாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட பெருமையும் கொண்ட தாகத் திருமுருகாற்றுப்படை விளங்குகின்றமை அதன் தனித்துவத்துவத்தினையும் சிறப்பினையும் எடுத்துக்காட்டுகின்றது. இவ்விலக்கியம் தோன்றிய பின்னரே கடவுள் நெறியை, மெய்ப்பொருள் உண்மையை வெளிப்படுத்துகின்ற இலக்கியங்கள் தமிழ் இலக்கிய வரலாற்றில் படிப்படியாக எழ ஆரம்பித்தமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### ஆற்றுப்படை நூல்கள்

தமிழ் இலக்கிய வரலாற்று வளர்ச்சியில் ஆற்றுப்படை இலக்கியம் தமிழ் மொழி - தமிழ் பண்பாட்டுக்குரிய தனித்துவமாகும். தமிழ் இலக்கியங்களில் குறிப்பாக சங்க இலக்கியங்களில் வீரம், காதல், கொடைச் சிறப்பு, களவு, நிலையாமை போன்ற கூறுகள் தெளிவாக எடுத்துரைக் கப்பட்டிருப்பினும் மக்களின் வாழ்வில் வேரூன்றி இலக்கிய வடிவில் சிறந்து விளங்கிய பண்பா கவே ஆற்றுப்படை இலக்கியப் பண்பு விளங்குகின்றது.

ஆற்றுப்படை என்பது ஆறு, படு எனும் இரண்டு சொற்கள் ஒன்றுகூடி "ஆற்றுப்படு" என ஒரு சொன்னீர்மைப்பட்டுப் பகுதியாய் நின்று தொழிற்பெயர் பொருளுணர்த்தும் "ஐ" விகுதி புணர்ந்து ஆற்றுப்படை எனத் தோற்றம்பெறலாயிற்று (ஆறுமுகநாவலர் உரை, 1971:18). இதன் பொருள் வழிப்படுத்தலாகும். அதாவது செல்வந்தனிடம் பரிசில் அல்லது பொன் பெற்று வரும் கூத்தர், பாணர், பொருநர், விறலி போன்ற புலவர்கள் வழியிடையே தம்மை எதிர்ப்பட்ட இரவலர்களது துயரைக்கண்டு "நின்னைப் போலவே யானும் இருந்தேன்" அதாவது வறுமையால் வாடிய புலவனின் அல்லது இரவலனின் நிலைகண்டு இரங்கித் (புலவர்களது வறுமை நிலையானது பல ஆற்றுப்படை நூல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக பெரும்பாணாற்றுப் படையில், "வெந்தெறல் கனலியொடு மதிவலம் திரிதரும், தண்கடல் வரைப்பில் தாங்குநர்ப் பெறாது..." (அடிகள், 17-22)) தாம் பெற்ற பெருஞ் செல்வத்தை அவர்களும் பெற்று மகிழும்படி வழிப்படுத்துதலேயாகும். இதனையே,

"இன்நகை விறலியோடு மென்மெல இயலிச்
செல்வை ஆயின் செல்வை ஆகுவை..." (புறநானூறு, 70:15) எனும் வரிகள் எடுத்துக்காட்டு கின்றன.

அதாவது, "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமே" என்ற பரந்துபட்ட நோக்குடன் அல்லது மனப்பாங்குடன் ஒருவருக்கொருவர் தத்தம் அனுபவங்களை எடுத்துரைத்து "வையத்துள் வாழ் வாங்கு வாழ வழிகாட்டுதல்" இதன் சிறப்பம்சமாக விளங்குகிறது. ஆற்றுப்படைக்கு இலக்கணம் கூறும் தொல்காப்பியம்,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறா அர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்" (தொல்காப்பியம்: புறத்தினை, நூற்பா.30) என வரையறுக்கின்றது.

மேற்குறித்த செய்யுளைப் பகுத்தாராய்ந்து நோக்குமிடத்து, கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும் - புலவர்களைக் கண்டு "விளிப்பதாகவும்", ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றி - "வறுமை" நிலையினையும், பெற்ற பெருவளம் பெறா அர்க்கு - "பரிசில் அல்லது பணத்தினைப்" பெற்றுக்கொள்ளலாம் எனவும் சென்று பயன் எதிரச்சொன்ன பக்கமும் - "ஆற்றுப்படுத்துவதாக வும்" அமைந்திருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

சங்க காலத்தில் தோற்றம்பெற்ற ஆற்றுப்படை நூல்களின் பொதுப் பண்புகளாக, வறுமை நீங்கல் (இன்நகை விறலியோடு மென்மெல இயலிச் - புறநானூறு, 70:15), தன்னனுபவம் கூறல் (செல்வை ஆயின் செல்வை ஆகுவை - புறநானூறு, 70:15), கொடைச்சிறப்பு (துலைப்பாடன்றே அவன் ஈகை - புறநானூறு, 70:15), நிலச்சிறப்பு (அடுதீ அல்லது சுடுதீ அறியா - புறநானூறு, 70:05), மன்னனை வாழ்த்துதல் (நினைக்க வேண்டா வாழ்க அவன்தாளே - புறநானூறு, 70:15) என்றவாறு அமைக்கப்பட்டுள்ளன.

பொதுவாக ஆற்றுப்படை நூல்கள் வழிப்படுத்துவோன் அல்லது வழிப்படுத்தப்பட்டவனின் பெய ரைக்கொண்டு அமைந்து விளங்குகின்றமை அதன் சிறப்பம்சமாகும். எடுத்துக்காட்டாக, கூத்தர்கள் எல்லாக் கூத்தையும் செய்ய வல்லவர்கள். அக்கூத்தரைப் பற்றிய பாடல்கள் கூத்தராற் றுப்படையாகவும் அதேபோல் நடிப்பில் வல்ல பொருநரை வைத்துப்பாடிய பாடல்கள் பொருநராற்

றுப்படையாகவும் விளங்குகின்றன. மேற்குறித்த வைப்புமுறையிலிருந்து திருமுருகாற்றுப்படை, யாரிடம் ஆற்றுப்படுத்து கின்றானோ அத்தலைவன் பெயரைக் கொண்டதாக விளங்குகின்றது (திருமுருகாற்றுப்படை எத்தகைய தனிப்பட்ட கலைஞர்களையும் ஆற்றுப்படுத்தியதாகத் தெரிய வில்லை). இங்கு ஆற்றுப் படுத்துபவர் - நக்கீரனார், ஆற்றுப்படுத்துப்படுவது - மெய்ப்பொருளான முருகனிடமாகும். குறிப்பாக இறைவனிடம் ஆற்றுப்படுத்தும் வழக்கம் ஆரம்பத்தில் இல்லாத சூழ்நிலையில் திருமுருகாற்றுப் படையின் தோற்றம் விதந்து குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

### திருமுருகாற்றுப்படையும் அதன் சிறப்பம்சங்களும்

கடைச்சங்க காலத்தில் தோற்றம்பெற்ற முப்பத்தாறு நூல்களில் முதலாவதாக வைத்தெண்ணப் படுவது திருமுருகாற்றுப்படையாகும். இந்நூல் ஆசிரியப்பாவால் அமைந்து 317 அடிகளைக் கொண்டதாக விளங்குகிறது. இதன் ஆசிரியரான நக்கீரனார் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த தெய்வப் புலவராக விளங்கினார் என்பதைப் புராண, இதிகாசங்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம். இவர் உலகியல் வாழ்வில் நின்ற நிலையிலேயே எங்கும் நிறைந்த பரம்பொருளா கிய முருகனைப் பற்றியும் பிறராற் பெறுவதற்கு அரிதான பேரின்பமாகிய வீடுபேற்றினையும் அதனை அடைவதற்குரிய வழிமுறைகளையும் எடுத்துக்கூறி முருகனிடத்து ஆற்றுப்படுத்துவதாக (திருமுருகாற்றுப்படை என்பது, திரு - முரு - ஆற்றுப்படை. "திரு" - அழகிய, "முருகு" - முருகனி டம், "ஆற்றுப்படை" - வழிப்படுத்துதல்) இந்நூலைப் படைத்திருக்கின்றார்.

அதாவது, வீடுபேறு பெறுவதற்கு ஓர் இரவலனை வீடுபெற்றான் ஒருவன் முருகனிடத்தே ஆற்றுப்படுத்துதல் திருமுருகாற்றுப்படையாயிற்று. இதனையே நச்சினார்க்கினியர், "வீடு பெறு வதற்குச் சமைந்தானோர் இரவலனை வீடு பெற்றவனொருவன் முருகனிடம் ஆற்றுப்படுத்தியது" என உரைக் கின்றார் (நவநீதகிட்டிணன், 1976:40). இதன்பேறாக பிற்கால வெண்பா ஒன்று திருமுருகாற்றுப்படையைப் பாராயணம் செய்தால் நினைத்தவை அனைத்தையும் பெற்றுக்கொள் ளலாம் என எடுத் துரைக்கின்றது.

இலக்கிய வரலாற்றில் ஆரம்ப காலங்களில் தோன்றிய இலக்கியங்களில் தெய்வத்திடம் ஆற்றுப் படுத்தும் வழக்கம் காணப்பட்டிருக்கவில்லை என்பது வெளிப்படை. இதனையே இராசமாணிக்கனார் "மனிதனைத் தெய்வத்தினிடம் ஆற்றுப்படுத்தும் வழக்கம் தொல்காப்பியர் காலத்தில் அறவே இருக்கவில்லை" எனக் குறிப்பிட்டதன் தாற்பரியமாகும் (சுப்பிரமணியம், 1982:120). இந்நிலையில் நக்கீரனார் முதன்முதலில் பரம்பொருளாகிய முருகனிடம் ஆற்றுப் படுத்துவதாகத் திருமுருகாற்றுப்படையை அருளியிருந்தமை சிறப்பிற்குரியதொன்றாகும்.

"முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப்படுத்த உருகெழு வியனகர்" எனும் அடிகள் (திருமுருகாற்றுப்படை, 244-245) எடுத்துக்காட்டுகின்றன.

சங்க காலத்தில் தோற்றம்பெற்ற இம்மரபே பிற்காலத்தில் குறிப்பாக பல்லவர், சோழர் காலத் தில் முற்றுமுழுதாக இறைவனைப் பாடும் மரபுநிலையாக வளர்த்தெடுக்கப்பட்டதற்கு அடிப் படையாயிற்று எனலாம்.

திருமுருகாற்றுப்படையில் முருகன் எழுந்தருளியிருக்கும் தலங்களாகிய திருப்பரங்குன் றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி, திருவேரகம், திருத்தணி, பழ முதிர்ச்சோலை எனும் ஆறுபடை வீடுகளின் சிறப்புக்களும் அங்கு நடைபெறும் வழிபாட்டு முறை களும் சிறப்பிக்கப்பட்டுள்ளன. முருகப்பெருமானின் அடியவனை மேற்குறிப்பிட்ட தலங்களுக்கு

ஆற்றுப்படுத்தி அங்கு சென்று வழிபட்டால் வீடுபேற்றினை எய்தலாம் என்றும் சித்திரிக்கப்பட்டுள்ளது. முருகனின் ஆறுபடை வீடுகள் பண்டைக் காலம்தொட்டுத் தமிழகத்தில் காணப்படுகின்றமை முருக வழிபாட்டின் தொன்மையினையும் மக்கள் அவன்பால் கொண்ட ஈடுபாட்டினையும் எடுத்துக்காட்டுகின்றது.

எனவேதான், குறை தீர்க்கும் தெய்வமாய் வீரமும் - காதலும் அன்பும் - அருளும் வளர்ச்சி பெற அருளும் தெய்வமாய் எல்லாவற்றிக்கும் ஆதார சுருதியாக விளங்குபவனாக முருகன் போற்றப்படு கின்றான்.

இவ்வகையில் முருகன் திருவடியடைந்து வணங்கும் அடியார்கள் இம்மைப் பயன் ஒன்றையே அவன்பால் இரத்தல் இல்லை. அவனிடத்துத் தாம் செலுத்தும் அன்பினூடாக இறைவனின் பேரருளையும் அன்பையும் அறத்தையுமே இரந்து வேண்டுகிறார்கள். இதனையே,

"யாம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல
நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும்"
எனப் பரிபாடல் குறிப்பிடுகின்றது (பரிபாடல், 5:78-81).

**திருமுருகாற்றுப்படைக்கு ஊடாக வீடுபேறு**

வீடுபேறு என்பது மனிதன் வாழ்வில் அடைய வேண்டிய இலக்குகளில் இறுதியாக வைத்தெண்ணப்படுவது என இந்துசமயத் தத்துவ நூல்கள் கூறுகின்றன. இதனையே புருடார்த்தக் கோட் பாடு (அறம், பொருள், இன்பம், "வீடு") தெளிவாக வலியுறுத்தி நிற்கின்றது. இவ்வுலகத்தில் "மண்ணில் நல்ல வண்ணம" வாழ வேண்டிய விதிமுறைகள் மற்றும் ஆசாரங்களைச் சரியாகக் கடைப்பிடிப்பதன் மூலம் வீடுபேறு தானாக வந்தெய்தும் என்றும் அஞ்ஞான நிலையிலிருந்து விடுபடுதலே இறுதி இலக்கான வீடுபேறு அல்லது விடுதலை (ஞானகுமாரன், 2020:150) என்றும் சமய தத்துவங்களும் அற இலக்கியங்களும் எடுத்துக்கூறியிருக்கின்றமை தக்கசான்றுகளாகும். இதனை,

இந்துசமயம் - பஞ்சமாபாதகங்களை தவிர்த்தல் வேண்டும்.
பௌத்தம் - பஞ்சசீலம் (சீலம் என்பது ஒழுக்கம்), அட்டசீலம், தசசீலம்
போன்றவற்றைக் கடைப்பிடித்தல் அவசியம்.
கிறிஸ்தவம் - பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

இஸ்லாம் - பொய், களவு... போன்ற பாவங்களைத் தவிர்த்தல் வேண்டும் என ஒவ்வொரு சமயங்களும் வலியுறுத்துகின்றன. வள்ளுவர் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்கள் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்றும் ஆறுமுகநாவலர் போன்ற பெரியோர்கள் "எமக்கு இந்த சரீரம் கிடைத்ததன் நோக்கம் இறைவனை வழிபட்டு முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்" எனக் கூறியமையும் இங்கு குறிப்பிட்டுக்காட்டலாம்.

மேற்குறித்த கருத்தியல்களை அடிப்படையாகக்கொண்டு மனிதன் அடைய வேண்டிய இறுதி இலக்கான வீடுபேற்றினைத் திருமுருகாற்றுப்படையை மூலமாகக்கொண்டு நோக்கும் போது, சங்க காலத்தில் தோற்றம்பெற்ற ஆற்றுப்படை நூல்கள் அறம், பொருள், இன்பம், வீடு எனும் உறுதிப் பொருட்கள் நான்கினுள் பொருளினைப் பெறுவதற்கு அதாவது இம்மை இன்பத்தை நோக்காகக கொண்டு வழிப்படுத்துவனவாகவே அமைந்திருக்கின்றன என்பதை தொல்காப்பியம், புறநானூறு போன்ற நூல்களில் எடுத்துக்காட்டப்படுகின்றன. இந்நிலையில் திருமுருகாற்றுப்படையானது மேற் குறித்த கட்டமைப்பிலிருந்து அல்லது வைப்புமுறைக்கு மாறாக பெறுதற்

கரிய வீடுபேறாகிய கந்தழி யினைப் (முருகனின் அருள்) பெறுவதற்குக் குறிப்பாக மறுமை இன்பத்தை நோக்காகக்கொண்டு வழிப்படுத்துவதாக அமைகின்றது.

"சேவடிப் படருஞ் செம்மலுள்ளமொடு
நலம்புரிக் கொள்கைப் புலம் புரிந்துறையுஞ்
செலவு நீ நயந்தனையாயின் பலவு...." (திருமுருகாற்றுப்படை, 62-63)

என்பதனால் அறியப்படும். இதனையே சிவப்பிரகாச சுவாமிகளும்,

"இன்னை நினைந்து கீர னிலங்கிலை நெடுவேற் செம்மல்
பன்னிரு செவியு மாரப் பருகமு தாகியோதின்
உன்னிய வுன்னி யாங்கிங் குதவுவதாகிப் பாவுண்
முன்னுற வந்து நிற்கு முருகாற்றுப்படை மொழிந்தான்" எனப் பாடியருளியமை சிறந்த எடுத்துக் காட்டாகும் (அருளம்பலம், 1937:14).

எல்லா உலகப் பயன்களுக்கும் மேலானது கடவுள் அருள் என்றும் அவனருள் கிடைத்தால் கிடைத்தற்கிய பேரின்பம் கிட்டும் என்பது சமய அருளாளர்களின் நம்பிக்கையாகும். இதனையே அவர்கள் பல்வேறுபட்ட பதிகங்கள், பாசுரங்களினூடாக எடுத்துக்காட்டியிருந்தனர். இதன்படி திருமுருகாற்றுப்படையிலும் வெளிப்படுத்தப்படும் உண்மைப்பொருள் யாதெனில் முருகப் பெருமானைப் போற்றிப் புகழ்ந்தால் கிடைத்தற்கரிய பரிசாகிய வீடுபேறு கிடைக்கும் என அறியமுடிகின்றது.

"உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின் செல்லேன்..." எனத் திருமுருகாற்றுப்படை வெண்பா அடிகள் சிறப்பித்துக் கூறுகின்றன. இதனையே மாணிக்கவாசகர், "அவனருளாலே அவன் தாழ் வணங்கி" என வெளிப்படுத்தியிருந்தார். இறைவனது திருவருளாலேயே உயிர்களுக்கு ஞானமலர்ச்சி உண்டாகின்றது என்றும் அவனது திருவருள் கிடைத்தால் எல்லா நலன்களும் எளிதிற் கிடைக்கும் என்பதனையே,

"பிரானரு ளுண்டெனின் உண்டுநற் செல்வம்
பிரானரு ளுண்டெனின் உண்டுநன் ஞானம்..." (திருமந்திரம், 1645)

எனத் திருமந்திரமும் "ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராண நல்ல ஆகமஞ்..." எனச் சிவஞானசித்தியார் போன்ற நூல்களும் வலியுறுத்தி நிற்கின்றன.

திருமுருகாற்றுப்படையானது மெய்ப்பொருளான முருகப் பெருமானுடைய பெருமைகளையும் அப்பெருமான் எழுந்தருளியிருக்கும் தலங்களையும் குறிப்பாக ஆறுபடை வீடுகள் பற்றியும் அதன் சிறப் புக்களையும் எடுத்துரைக்கின்றன ("உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர், அலைவாய்ச் சேறலும்..." திருமுருகாற்றுப்படை, 124-125, "மாஇருள் ஞாலம் மறுவின்றி விளங்கப், பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்..." திருமுருகாற்றுப்படை, 91-92). இதன்மூலம் "உண்மைப்பொருளாகிய இறைவனைப் புறத்தே கண்டு மகிழும் இடமாகக் காட்டுகின்றார். இத்தலங்களுக்குச் சென்று வழிபடுவதன் மூலம் இறைவன், அவன் அடியார்களுக்கு விரும்பிய வண்ணம் எதிர்தோன்றிக் காட்சியளிப்பதோடு எளிமைத் தன்மைவாய்ந்த அருளாளனாகவும் விளங்குவான். இதன்மூலம் அவனைக் கைதொழுது போற்றும் மெய்யடியார்களுக்குக் கிடைத்தற்கரிய வீடுபேறும் வாய்க்கப்பெறும்" என்பதனைத் திருமுருகாற்றுப்படை,

"இருள் நிறமுந்நீர் வளைஇய உலகத்து

ஒரு நீ ஆகித்தோன்ற விழுமிய

பெறலரும் பரிசில் நல்குமதி...." (திருமுருகாற்றுப்படை, 293-295) என மொழிதலால் அறிந்து கொள்ளலாம். கீதையில் கிருஸ்ண பரமாத்மா, "யார் என்னை எவ்வுருவிலே வழிபடு கிறார்களோ அவர்கட்கு யான் அவ்வடிவிலே காட்சி தருவேன்" எனக் குறிப்பிட்டதன் தாற்பரியமும் இதுவாகும்.

நக்கீரனார் தமது ஆற்றுப்படையில் இறைவனைப் பல இடங்களிலும் விழித்துப்பாடி இறை வனுடைய திருவுருவச் சிறப்புக்களையும் வியாபகத் தன்மையினையும் நுட்பமாக எடுத்தாண் டிருக்கின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அதாவது "சூரியன் கடலிலே எழுந்தாற் போன்ற சோதியையும் அடியார்க்குப் பாதுகாப்பாகி அஞ்ஞானத்தைப் போக்கும் திருவடிகளையும் பகை வரை அழிக்கும் திருக்கரங்களையும் உடையவனாகிய தேவசேனாபதி" என முதல் ஆறு அடி களில் விழிக்கின்றார்.

"உலக முவப்ப வலனேர்பு திரிதரு

பலர்புகழ் ஞாயிறு கடற் கண்ட..." (திருமுருகாற்றுப்படை, 1-4),

"செய்யன் சிவந்த ஆடையன், செல்வரைச்

செயலைத் தண்தளிர் துயல்வரும்..." (திருமுருகாற்றுப்படை, 206-207)

இதனைப் பின்பற்றியதைப் போல,

"அருவமுருவுமாகி யனாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்

பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாக..." (கந்தபுராணம் திருவவதாரப்படலம், 92) எனும் அடிகளும் முருகனின் பெருமைகளை வெளிப்படுத்தி நிற்பதையும் குறிப்பிடலாம்.

பரம்பொருளாகிய இறைவனை அகத்தூய்மையோடும் புறத்தூய்மையோடும் தொழுபவர் களுக்கு இவ்வுலகத்தில் எத்தகைய துன்பமும் விளையாது என்பதோடு அவர்கள் வினைவயத் தால் அடையக்கூடிய துன்பம் எதுவாயினும் அதிலிருந்து உய்யலாம் என்பதும் சமய அருளா ளர்களின் உள்ளத்துணிவாகும். இத்தகைய நிலைப்பாட்டினையையும் புலவர் (நக்கீரனார்) தமது பாடல்களினூடாக வெளிப்படுத்தியிருப்பதையும் அறியமுடிகின்றது. அதாவது இறைவனை உள் ளத்தே பொய்யின்றிச் தியானம் செய்தால் இறைவன் திருவருள் கிட்டும் அத்தோடு உன்னுள் குடிகொண்டிருக்கும் மலங்களை விட்டொழித்து உன்னுள்ளம் இறைவனாகிய முருகனைத் தியா னிக்கும். இதன்மூலம் நீ நினைத்த காரியமும் கைகூடப்பெறும். இதன்பேறாக முருகன் அருளா கிய பேறு உனக்குக் கிடைக் கும். இதனையே,

"நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப

இன்னே பெறுதிநீ முன்னிய வினையே..." (திருமுருகாற்றுப்படை, 63-67) எனும் அடிகள் வலியுறுத்துகின்றன.

ஆன்மாக்கள் கன்மங்களிலிருந்து விடுதலை பெற்று முத்திநிலையடைகின்றன என்பது இந்தியத் தரிசனங்களின் பொதுவான நம்பிக்கையாகும். இருந்தும் ஆன்மாக்களை மலங்கள் மறைத்து நிற்பதால் மெய்ஞானமாகிய பரம்பொருளை உணரும் தகுதியை இழந்துவிடுகிறது. இதனையே திருமந்திரம் போன்ற அறநூல்கள்,

"மலக்கலப்பாலே மறைந்தது சக்தி

மலக்கலப்பாலே மறைந்தது ஞானம்..." (திருமந்திரம், 2213) என வலியுறுத்துகின்றன.

எனவேதான், ஆன்மாக்கள் மலங்களிலிருந்து விடுபடுவதற்கு இறைவனது திருவருட்சக்தி யானது இன்றியமையாததாக விளங்குகிறது. இதனையே சைவசித்தாந்திகள் "திருவருட்சக்தி

ஆன்மா மீது படிதல்" (சத்தினிபாதம்) என விளக்கியிருந்தனர். அவனை நினைத்து அவன்தாள் வணங்கி அவனருளால் தன்னுணர்வற்று அவனுணர்வாகி எல்லாம் அவன் என உணர்வதன் மூலம் ஆன்மாக்கள் மலங்களிலிருந்து விடுபட்டு ஈடேற்றம் பெறுகின்றன. இது பற்றி நக்கீரனார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்,

"நின் அளந்து அறிதல் மன் உயிர்க்கு அருமையின்
நின்னடி உள்ளி வந்தனென் நின்..." (திருமுருகாற்றுப்படை, 278-279)

இதனையே புராண, இதிகாசங்கள் அஞ்ஞான இருளாகிய அசுரரை அழித்து மெய்ஞ்ஞான மாகிய அறிவுச்சுடரை இறைவன் ஏற்றுதற்காகவே ஆறுமுக வடிவம் கொண்டான் எனக் கூறு கின்றன. அதாவது பக்தியினால் இறைவனை மறவாது உணர்ந்தார்க்கு இறைவன் பாசத்தை நீக்கி முத்தியளிப்பான். இதனையே சிவஞானபோதம்,

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ..." (சிவஞானபோதம், சூத்திரம் -12) என வலியுறுத்து கின்றது

இவ்வகையில் இறைவனிடம் சரணடையும் அன்பர்களுக்கு ஆணவம் அழிந்து பிறவிக் கடலுக்குத் தோணியென்ற ஆர்வத்தோடு அந்த அடியைப் பற்றிக்கொள்வதனால் வீடுபேறு கிடைக் கப் படுகின்றதோடு வேண்டியவாறு வேண்டியவர்களுக்கு அங்கங்கே எழுந்தருளி அருள்பாலிப் பான் என்பதனைத் திருமுருகாற்றுப்படை தெளிவாக விளக்கி நிற்கின்றது.

"வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டாண்டு உறைதலும் அறிந்த..." (திருமுருகாற்றுப்படை, 248-249) எனும் வரிகள் ஆதாரப்படுத்துகின்றன. இறைவனை அன்புடன் காணுவோருக்கு முதலில் தோன்றுவன அவ னது திருவடிகள். இதனாலேயேதான் அவனைக் காட்டிலும் அவனடிகள் சிறந்தன என்று பரிபாடல் எடுத்துக்காட்டுகின்றது. "நின்னிற் சிறந்த நின் தாளினையவை..." (ஜகந்நாதன், 1947:22) எனும் வரிகள் ஆதாரப்படுத்துகின்றன.

அதாவது, இறைவன் திருவடியே உயிர்களுக்கு வீடாயிருக்கும் என்பதனைத் "தென்னன் பெருந்துறையான், காட்டாதன எல்லாம் காட்டிச் சிவம் காட்டித், தாட்டாமரை காட்டித் தன் கரு ணைத் தேன் காட்டி" எனவரும் திருவாசக அடிகள் நன்கு தெளிவுபடுத்திக்காட்டுகின்றன. கச்சியப் பர் இதனைக், "கருணைகூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங்கொண்டே ஒரு திருமுரு கன் வந்தாங் குதித்தனன் உலகமுய்ய" என்று கூறுவதும் ஒப்புநோக்கத்தக்கதாகும்.

ஆக, பேரருளாளனாகிய இறைவனது திருவடியெனப்பெறும் திருவருட்சக்தியானது உயிர்களது இடர்நிலைக்கு இரங்கிக் கொடிய நரகமெனப்படும் அவ்விருளாகிய துன்பக்குழியில் துயருறும் ஆன்மாக்களைத் தன்னருளாகிய கையினைக்கொண்டு பற்றியெடுத்து ஈறிலாப் பேரின்ப பெருவாழ்வாகிய இன்பக்கரையிலே ஏற்றி உய்வித்தருளுகின்றான். இதன்மூலம் ஆண வம் எனப்படும் அகவருள் நீங்க உயிர்கட்கு வீடுபேறு இயல்பாகவே அமைந்துவிடுகிறது என்பது திருமுருகாற்றுப்படையிலிருந்து அறி யக்கிடக்கின்றது.

**முடிவுரை**

திருமுருகாற்றுப்படையானது தமிழில் தோன்றிய பக்தி இலக்கியங்களில் முதன்மையான தாகத் திகழ்வதோடு பரம்பொருளான முருகப்பெருமானின் சிறப்புக்களையும் பெருமைகளையும் எடுத்துரைப்பதிலும் தனித்துவமாக விளங்குகிறது. எனவே முருகன்பால் ஈடுபட்டால் உண்மை யான பேரின்பமாகிய வீடுபேற்றினை அளிப்பான் என்பது ஆய்வுகளின் மூலம் வெளிக்கொணரப்

பட்ட உண்மையாகும். திருமுருகாற்றுப்படையில் தொடக்கிவைக்கப்பட்ட இத்தகையதோர் இலக்கியப் பண்பே பிற்காலத்திய பக்திநெறி வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் ஊன்றுகோலாய் விளங்கியிருந்தன. இதனாலேயேதான் சங்க நூல்களுக்கெல்லாம் கடவுள் வாழ்த்துப்போல அமைந்திருக்கக்கூடிய இந் நூலினை சைவர்கள் நாள்தோறும் ஓதும் மந்திர நூலாகவும் போற்றுகின்றனர். இந்நூல் ஓதும் சிறப் பினை "நக்கீரர் தாமுரைத்த நன் முருகாற்றுப்படையைத், தற்கோல நாள்தோறும் சாற்றினால் முற் கோல, மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித் தான் நினைத்த எல்லாம் தரும்" எனப் பழம் பாடல் ஒன்று எடுத்துரைப்பதிலிருந்து அதன் சிறப் பினை அறியமுடிகின்றது.

## உசாத்துணை நூல்கள்


- அருளம்பலம்.சு.,(1937),திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சியுரை, ஸ்ரீ சண்முகநாத அச்சியந்திர சாலை, யாழ்ப்பாணம்
- ஆறுமுகநாவலர்.,(1971),திருமுருகாற்றுப்படை,யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற்பதிப்பு விற்பனைக்கழகம், யாழ்ப்பாணம்
- ஆய்வரங்கக் கட்டுரைகள்,(1997),இந்துசமய கலாசாரத் திணைக்களம்,கொழும்பு
- இராசமாணிக்கனார்.மா.,(1996), தமிழ் மொழி - இலக்கிய வரலாறு சங்க காலம், பூங்கொடி பதிப்பகம்,சென்னை
- இராஜேந்திரக்குருக்கள்.சு.,(1988), நக்கீர முனிவர் பாடியருளிய திருமுருகாற்றுப்படை விளக்கவுரை, அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்,நீர்வேலி
- ஜகந்நாதன்.கி.வா.,(1949),திருமுருகாற்றுப்படை,சைவசமய பக்த ஜனசபை வெளியீடு,சென்னை
- கந்தபுராணம், உற்பத்திக்காண்டம், திருவவதாரப்படலம் - 92.
- கைலாசபதி.க.,(1966),பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்,நியூசெஞ்சரி புக் ஹவுஸ், சென்னை
- கோதண்டபாணிப்பிள்ளை.கு.,(1972),திருமுருகாற்றுப்படைத் திறன், தென்னிந்திய சைவசித் தாந்த நூற்பதிப்புக்கழகம்,திருநெல்வேலி
- கோவிந்தன்.கா.,(1953),சங்கத் தமிழ்ப் புலவர் வரிசை - நக்கீரர், தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி
- சண்முகம்பிள்ளை.மு.,(1996), சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
- சுப்பிரமணியன்.கா.,(1982), சங்க காலச் சமுதாயம், நியு செஞ்சரி புக் ஹவுஸ்,சென்னை
- சுப்பிரமணியன்.வே.ச.,(2006), சங்க இலக்கியம் மூலமும் முழுவதும்,மணிவாசகர் பதிப்பகம், சென்னை
- செல்வநாயகம்.வி.,(2013),தமிழ் இலக்கிய வரலாறு, குமரன் புத்தக இல்லம்,கொழும்பு
- ஞானகுமாரன்.ந.,(2020), இந்திய உளவியல்,தூண்டி இலக்கிய வட்டம்,திருநெல்வேலி
- திருமூலர் அருளிய திருமந்திரம், (1968,) திருப்பனந்தாள் காசி மட வெளியீடு.
- நவநீதகிட்டிணன்.மா.,(1976), தமிழ் இலக்கியத்தில் ஆற்றுப்படை (பதிப்பிக்கப்படாத கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வு), மதுரைப் பல்கலைக்கழகம்,மதுரை
- நக்கீரர் அருளிய திருமுருகாற்றுப்படை பாட்டும் உரையும்,(1992),செல்லத்துரை தேவராசா ஞாபகார்த்த வெளியீடு, யாழ்ப்பாணம்

* பிள்ளை.கே.கே.,(2011), தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை
* முருகையன்.மு, அறவேந்தன்.இரா, தமிழ்வேலு.சு.,(2000), சங்க இலக்கிய ஆய்வுகள்,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை
* சிவகுருநாதன்.சி.,(1990).மெய்கண்டதேவ நாயனார் அருளிச் செய்த சிவஞானபோதம், செட்டியர் பதிப்பகம்,யாழ்ப்பாணம்
* வெள்ளைவாரணனார்.க.,(2002),சைவசித்தாந்த சாத்திர வரலாறு, தமிழ்ப் பல்கலைக்கழகம். தஞ்சாவூர்
* வையாபுரிப்பிள்ளை.எஸ்.,(1967),சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்), பாரிநிலையம், சென்னை